1992 ஏப்ரல் 21]

ஊட்டச்சத்துத் திட்டத்தின்கீழ் 1.96 லட்சம் குழந்தைகளும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1.30 லட்சம் குழந்தைகளுக்கும் இதிலே பயன் ஏற்படுகின்றன, இதற்காக 20 மாவட்டங்களில 80 திட்ட அலுவலகங்ளைக் கொண்ட 7,061 குழந்தைகள நல மையங்கள் செயல்பட்டு வருகின்றன. 1-8-1991 முதல் மேலும் 30 வட்டாரங்களுக்கு இது விரிவு படுத்தப்படட்டிருக்கிறது. இதற்காகும் செலவு குறித்து, தனிக் கேள்வி போடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள் - விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 588, திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர்.

588—

அரசு உறைவிடப் பள்ளிகளில் சத்துணவு மையங்கள் அமைத்தல்.

*812— திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம் அந்தியூர் தொகுதியில் காக்காயனூர், குட்டையூர் போன்ற இடங்களில் திறக்கப்பட்ட மலைவாழ் மக்கள் அரசு உறைவிடப் பள்ளிகளில் சத்துணவு மையங்கள் அமைக்க அரசு முயலுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் திறக்கப்படும் ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதிய சத்துணவு மையங்கள் ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை என்று அரசு கருதுகிறது.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற சிந்தனையாளர், விடுதலை வீரர், பகுத்தறிவுப்பகலவன் தந்தை பெரியார் பிறந்த மாவட்டத்தினுடைய கடைசிப் பகுதியாக இருக்கின்ற ஊர்தான் குட்டையூர், காக்காயனூர் என்ற மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதியாகும். இந்த ஊரிலே ஆதிதிராவிடர் மற்றும் ஆதிவாசிகளுக்காக இரண்டு பள்ளிகள் கடந்த ஆண்டு நான் வணங்கும் இதய தெய்வம், அம்மா, டாக்டர் அவர்களுடைய ஆட்சியிலே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தப் பள்ளியிலே ஆதிவாசிகள் அல்லாத மற்றஇதர ஜாதியினர் அந்த ஊரில்

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வாழ்கின்ற மக்களுடைய குழந்தைகளை அந்த விடுதியிலே சேர்க்க முடியாமல் ஆனால் தினமும் பள்ளிக்கு வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட குழந்தைகளுக்கு மதிய உணவு கிடைக்காத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது, என்பதை அரசு அறிந்து அந்த குழந்தைகளுக்கும் மதிய உணவு கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மூன்று வேளையும் உணவு ஏற்கெனவே வழங்கப்பட்டு வருவதால் புதிய சத்துணவு மையங்கள் ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை. ஆதி திராவிடர் அல்லாத குழந்தைகள், மலைவாசி அல்லாத குழந்தைகள இதில் இருக்கும் என்று தோன்றவில்லை. ஏனென்றால் இதற்காகவே ஏற்படுத்தப்பட்டுள்ள பள்ளி அந்தப் பள்ளி. அப்படி இருப்பதாக உறுப்பினர் அவர்கள் தகவல் கொடுத்தால் அந்த குழந்தைகளுக்கு மட்டும் அதே பள்ளிக்கூடத்தில் சத்துணவு வழங்கப்படும் என்பதை தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பள்ளிக்கூடம் ஆதிதிராவிடர்கள் நலத்துறையின் மூலமாக ஆதிவாசிகளுக்கு மட்டும்தான் மூன்று நேரமும் உணவு வழங்கப்படுகிற உறைவிடப் பள்ளியாகும். இதே துறையில்தான் நான் 26 ஆண்டுகளாக நான் பணியாற்றினேன். அந்தப் பள்ளிக்கூடத்திலே படிக்கின்ற ஆதிவாசிகளுக்கு மூன்று நேரமும் உணவு வழங்கப்படுகிறது. ஆனால் வெளியிலே இருந்து வருகிற மாணவர்களுக்கு உணவு அளிப்பதில்லை. நான் வணங்கும் தெய்வம், ஒப்பற்றத் தலைவி புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் எல்லா குழந்தைகளும் எல்லா நலனும் பெற வேண்டும் என்ற கல்வி நோக்கோடு, பொது அறிவியலும் பெற வேண்டும் என்று நூல் நிலையம் அமைத்துக் கொடுத்திருக்கிற ஒப்பற்றத் தலைவியினுடைய ஆட்சியில், வெளியிலே இருந்து வருகிற அந்த ஏழையெளிய பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட குழந்தைகளுக்கும் மதிய உணவு வழங்குவதற்கு, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின் கீழ் உணவு வழங்க அரசு முயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளியிலேயிருந்து பயிலுகிற குழந்தைகள் எவ்வளவு இருக்கிறார்கள் என்பதைச் சொன்னால், புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் ஒரு குழந்தைக்கும் உணவு இல்லை என்று சொல்லாத வகையில் அந்த குழந்தைகளுக்கும் உணவு அளிக்கப்படும் என்பதை நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

1992 ஏப்ரல் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 589, திருமதி கற்பகம் இளங்கோ. மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

589—

முதியோர் புனர்வாழ்வு இல்லம் அமைத்தல்.

*4757 திருமதி கற்பகம் இளங்கோ :

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

காரைக்குடி தொகுதியில் முதியோர் மற்றும் உடல் ஊன முற்ற விதவைகளுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் முதியோர் புனர் வாழ்வு இல்லம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திருமதி கற்பகம் இளங்கோ : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோருக்கும் பெய்யும் மழை 'என்ற பாடலுக்கு இலக்கணமாக அமைந்து எல்லோரையும் வாழ வைத்துக் கொண டிருக்கும் தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம், தமிழக முதலவர் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக் காலத்தில் முதியோர் மற்றும உடல் ஊனமுற்ற விதவைகளுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் முதியோர் புனர்வாழ்வு இல்லம் வரும் நிதியாண்டிலேயாவது அமைக்கும் திட்டத்தை கருணையோடு பரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள், ஒவ்வொரு மாவட்டத்திலும் வருகிற ஆண்டில் இதை படிப்படியாக நிறைவேற்ற வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த வகையில் இது நிறைவேற்றப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.